# வடகிழக்கு மாகாண சபையின் நியமனங்கள் ரத்து

வடக்குக் கிழக்கு மாகாணசபையினுல் மேலதிகமாக வழங்கப்பட்ட நியமனங்கள் தற்போது கட்டம் கட்டமாக நிறுத்தப்பட்டு வருகின்றன. இம்மாதம் 30 ஆம் திகதியுடன் வேலையில் இருந்து விலக்கப்படுவதாக மாகாணசபை சேவையில் சேர்க்கப்பட்ட ஒரு தொகுதி ஊழியர்களுக்கு இக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மாகாணக் கடற்றெழில் அமைச்சு உட்பட வேறுசில அமைச்சர்களின் அமைய ஊழியர்களுக்கு இக்கடிதங்கள் கிடைத்துள்ளன. ஆளுநர் நளின் செனவிரட்ணவினுல் இதற்கான பணிப்புரைகள் சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சின் செயலாளர்களுக்கு விடுக்கப்பட்டன.


பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 81 வெள்ளி 27-04-1990 (சித்திரை 14) ரமழான் 30


# முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமை கிடைக்கப் புலிகள் போராடுவர் - யோகி

முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமைக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் போராடுவர் என்று விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி தெரிவித்தார்

முஸ்லிம்களின் ரமழான் தினத்தையொட்டி அவரிடம் தொடர்புகொண்ட போதே அவர் மேற்படி முரசொலிக்குத் தெரிவித்தார். முஸ்லிம்களின் தாயகமாக வடகிழக்கை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இந்திய, இலங்கை ராணுவம் பொது மக்களால் மாநகர சபைக்கு 300 லட்சரூபா மின் நிலுவை

1983 ம் ஆண்டிற்குப் பின்னர் யாழ் மாநகர சபைக்கு 300 லட்ச ரூபா மின்சாரநிலுவையாக உள்ளது.

இந்த நிலுவைப்பணம் கட்டப்பட்ட பின்னரே மாநகரப் பகுதியில் மின்சார அபிவிருத்தி வேலைகள் இடம்பெறுமென மின்சார சபை தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

தற்போது மாதாமாதம்யாழ் மாநகர சபைக்கு 5 லட்சரூபா இழப்பு மின்சாரத்தினுல் ஏற்பட்டுவருகின்றது. நிலுவைப் பணமான 300 லட்ச ரூபா இலங்கை ராணுவத்தினராலும் பொதுமக்களாலும். இந்திய ராணுவத்தினராலும் ஏற்பட்டதெனத் தெரிவிக்கப் படுகிறது. (03)

## அரசாங்கம் விடுத்த அழைப்பை ஈ. பி, ஆர். எல். எப். ஏற்றது

மே 15 இல் பேச்சு நடாத்த அரசு விடுத்த அழைப்பை ஈ பி ஆர் எல் எப் ஏற்றுக் கொண்டுள்ளது.

இனப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் நிரந்தர அரசியல் தீர்வுகாண வெளிப்படையானதும் உபயோகமானதுமான ஆழமான பேச்சு வார்த்தை ஒன்றினை மே 15 ஆம் திகதி நடத்துவதற்காக விடுக்கப்பட்ட அரசின்

— 8ஆம் பக்கம் பார்க்க

## யாழ் நவீனசந்தை புனரமைக்க 35 லட்ச ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ் மாநகர சபைப் பகுதியில் மூன்று புனருத்தாரண வேலைகளுக்கு அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளது. இதற்கான நிதி விரைவில் வந்து சேரவுள்ளது.

யாழ்ப்பாணம் நவீன சந்தை புனரமைக்கப்பட்டுநவீனமயப் படுத்த 35 லட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் திட்ட அபிவிருத்திக்கு 20 லட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பதினெரு வீதிகள் திருத்தப் படுவதற்கு 40 லட்ச ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.(03)

## வாத்தக சங்கக் கூட்டம் நாளை

புதிய நிர்வாகிகள் தெரிவிற்கான யாழ். வர்த்தக ஊழியர் சங்க முக்கிய கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதி சங்கரப்பிள்ளை கட்டிடத்தில் நடைபெறவுள்ளது. விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி யாழ் மாவட்டப் பொறுப்பாளர் இஸ்ரானலி டொமினிக், அமைப்பாளர் ராஜன் இக்கூட்டத்தில் உரையாற்றுவர்.

## ஆசியசேவை ஒலிபரப்பு இடைநிறுத்தம்

தினசரி மாலை ஐந்து மணி முதல் ஏழு மணி வரை நடைபெறும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆசிய வர்த்தகசேவை ஒலிபரப்பு இன்று முதல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

## யாழ், பயிலுநர் ஆசிரியர் சிலரது நிலை கவலைக்கிடம்

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பயிலுநர் ஆசிரியர்களில் ஒரு சிலரது நியமனம் நிறுத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது. ஏற்கனவே அரச தொழிலில் உள்ளவர்களுக்கும், பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுவருபவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளதனுலே இந்த நிலை யேற்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள கல்வி அலுவலகம் ஒன்றில் கடமையாற்றிய ஒருவருக்கும்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## எழுதுவினைஞர் விண்ணப்பங்கள்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாளர் குழாமில் உள்ள தமிழ் எழுதுநர் பதவிகளுக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

## தெங்குபனம் பொருள் உ. வி. கூ. சங்கம் மேற்பார்வையாளர் பதவி நேர்முகப்பரீட்சை 29ல்

தெங்கு பனம்பொருள் உ. வி. கூட்டுறவு சங்கங்களுக்கான மேற்பார்வை உதவி யோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது

—8 ஆம் பக்கம் பார்க்க

## அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டது

அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கப் பட்டுள்ளது இதற்கான பிரேரணை 48 அதிகப்படி வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேறியது.


வாசகர்கள் அனைவர்க்கும்
முரசொலியின்
ஈதுல்பித்ர்
வாழ்த்துக்கள்


## மட்டக்களப்பில் பொலிஸ் நேர்முகப் பரீட்சை நீடிப்பு

மட்டக்களப்பில் நடைபெற்று வரும் பொலிஸ் ஆட்சேர்ப்பிற்கான நேர்முகப்பரீட்சை விண்ணப்பதாரிகளின் அதிகரிப்பைத் தொடர்ந்து 30 ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினரின் பொலிஸ் விண்ணப்பப்பட்டியலில் உள்ள பெயர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடைபெற்றது.

## க. பொ; த. சாதாரண முடிவுகள் இம்முறை விரைவில் வெளிவரும்

தற்போது நடைபெற்றுவரும் க பொ. த சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் 30ம் திகதி முடிவடையும்.

இவ்விடைத்தாள்கள் முதலாம் திகதி கொழும்பு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

விடைத்தாள் திருத்தும் வேலைகள் விரைவாக இடம் பெறுவதால் இம் முறை வெகு விரைவில் க. பொ. த சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் வெளிவருமென எதிர்பார்க்கப் படுகின்றது. (03

## நிபுணர்களின் ஆலோசனையை ஆய்வு நிறுவனம் கேட்கிறது

வடக்கு கிழக்கு அபிவிருத்தி வேலைகளில் குறிப்பாக விவசாயம், பொறியியல் மின்சாரத்துறை மீன்பிடித்துறை திட்ட அமுலாக்கல் முறை கைத்தொழிற்துறை வங்கித்துறை நீர்ப்பாசனத் துறை போன்ற திட்டங்களைச் செயற்படுத்தத் தமிழீழ ஆய்வு நிறுவனம் எண்ணியுள்ளது.

வேலைத்திட்டங்கள் தெளிவாகவும் பூரணமாகவும் இலக்கினை அடைவதாகவும் இருப்பதற்காக பொருளாதார அபிவிருத்தி புனர்வாழ்வு சம்பந்தமான துறைகளில் அனுபவம் உள்ளவரினதும் நிபுணர்களினதும் ஆலோசனை ஆக்கபூர்வமான கருத்துகளையும் பங்க

— 8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். வீடமைப்புக் கடனுக்கு எண்ணாயிரம் பேர் விண்ணப்பம்

யாழ். மாநகரசபையில் வைத்து வழங்கப்பட்டுவந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடமைப்புக்கடன் விண்ணப்பப்படிவ விநியோகம் நேற்றுடன் முடிவடைந்தது.

சுமார் 8 ஆயிரம் பேர் இக்கடன் பெற விண்ணப்பித்துள்ளார்கள். இவ்விண்ணப்பங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு வீடமைப்புத திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. (03)

## கிளிநொச்சியில் தட்டெழுத்து வகுப்புகள்

கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் பிரதேச நிலையம் தமிழ் ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து வகுப்புகளை நடாத்தவுள்ளது. இந்த வகுப்புகளில் சேர விரும்புவோர் எதிர்வரும் 15.ம் திகதிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக தமது விண்ணப்பங்களை கல்வி உத்தியோகத்தர், பிரதேச நிலையம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### பளை அங்கிலிக்கன் ஆலய

## சேதம் தொடர்பான விபரங்கள் இந்தியத் தூதுவருக்கு அறிவிப்பு

அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த பளையிலுள்ள பரிசுத்த அன்றூஸ் கிறிஸ்தவ ஆலயத்தைஇந்தியஇராணுவம் முகாமாகவும் பாதுகாப்பு அரணாகவும் பாவித்தமையால் ஆலயத்திற்கும், ஆலயத்தைச் சுற்றியுள்ள வளவில் இருந்த தென்னை, பனை, மகோக்கனி மரங்கள் ஆகியன அழிக்கப்பட்டமையாலும் ஆலயத்திற்கு சுமார் 5 லட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அரணாக ஆலயத்தைப் பாவித்தமையால் ஆலயத்தின் இருபக்கங்களிலும் இருந்த கண்ணாடி ஜன்னல்கள் எல்லாம் உடைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தில் வாசல் கதவுகளும், நிலைகளும் முற்றாகப் பெயர்க்கப்பட்டும் உடைக்கப்பட்டும் உள்ளன. ஆலயத்தின் மேற்குப் புறமாக இருந்த ஜெபமண்டபம் முழுவதுமாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் பாவனையிலிருந்த சகலமரத்தளபாடங்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயத்திற்கு ஏற்பட்டுள்ள நஷ்டங்கள் குறித்து கொழும்பு திருமண்டலப் பேராயர் இலங்கையிலிருக்கும் இந்திய உயர்ஸ்தானிகருக்கு விரிவாக கடிதம் எழுதியுள்ளார். (27)

## மட்டுநகர் ஆஸ்பத்திரி புதிய டாக்டர்கள் நியமனம்

மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலைக்குப் புதிதாக பதினொரு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

14வைத்தியர்கள்தேவைப்பட்ட இந்த வைத்தியசாலைக்கு 21 வைத்தியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும். என எதிர் பார்க்கப்பட்டு - அவர்களுக்கான தங்குமிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன

எனினும்11 வைத்தியர்களே தற்போது நியமனங்களைப் பெற்றுள்ளனர். வைத்தியர்களின் பற்றாக்குறையினை தீர்த்து நற்சேவையினை வழங்க முன்[?] வரவேண்டும். இவர் என கோரப் பட்டுள்ளனர்.

## வேலணை ஆஸ்பத்திரியில் பெண்களுக்கு எப்போது விடுதலை

வேலணை கிராமிய ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சில பெண்ஊழியர்கள் தொடர்ச்சியாக சுகவீன லீவில் நிற்பதனுல் அவர்களுக்காக பதில் கடமையாற்றும் பெண் ஊழியர்களும் லீவின்றி தொடர்ச்சியாகவே கடமையாற்ற வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

சுகவீனலீவில் சென்ற ஊழியர்கள் மீளவும் கடமைக்கு வரும் போதுதான் பதில் கடமையாற்றிய ஊழியருக்கு விடுதலை கிடைகிறதாம் (24)

## வீதிகளைப் பராமரிக்க கோப்பாயில் அலுவலகம்

பருத்தித்துறை, உடுப்பிட்டி, சாவகச்சேரி, கோப்பாய் ஆகிய தொகுதிகளில் அமைந்துள்ள 'சி' 'டி' ஆகிய தரங்களிலுள்ள வீதிகளைப் பராமரிக்கும் அலுவலகம் கோப்பாய்த் தொகுதியில் உள்ள புத்தூரில் அமைக்கப்பட உள்ளது.

இவ் அலுவலகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஈடுபட்டுள்ளது.

'சி' 'டி' தரத்திலுள்ள வீதிகள் மாகாண சபையின் கீழேயே இயங்கி வருகின்றன. (94)


## சேவை

★ சகல இன றேடியோ ரெலிவிசன் வீடியோ டெக் திருத்திக் கொடுக்கப்படும்

★ சகல இன ரெலிவிசன்களின் FLY BACK. ரியூனர். கபினெற் ரியூப், வீடியா, டெக் நெட். RF CONVERTER. மோட்டர்கள் மற்றைய உதிரிப்பாகங்கள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

★ சகல இன ரெலிவிசன்களின் CIRCUIT. வீடியோ டெக், SERVICE MANUAL, பெற்றுக்கொள்ளலாம்

★ ரெலிவிசன், வீடியோ டெக் உதிரிப்பாகங்கள் சிங்கப்பூரிலிருந்து ஓடர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும்.

★ பிற்ருமக்ஸ், வீடியோ, கஸ்சட்; வீடியோ டெக் தேவைப்படுகின்றது விற்க விருப்பமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்,

★ திருத்த முடியாத றேடியோ ரெலிவிசன் விடியோ டெக் விலைக்கு வாங்கப்படும்

விபரங்களிற்கு

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவைக்கருகாமை)

யாழ்ப்பாணம்

Branch:

**MICRON ENGINEERING CENTRE**

173 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

04235


## சுய விபரம் சேகரிப்பு

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலகம் தனது பகுதிக்குட்பட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் சுய விபரங்களை திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது ஆசிரியர் ஒருவரின் நியமனத்திகதியிலிருந்து இதுவரை அவர் பற்றிய சகல விபரங்களும் கோரப்பட்டுள்ளது. (30)

## வாகனத்திற்கு நேர்ந்தகதி

ஆயுத பாணிகளான சில இளைஞர்களால் 1989இல் கடத்திச் செல்லப்பட்ட துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்று எஞ்ஜின் டயர்கள் இல்லாத நிலையில், கண்டு பிடிக்கப்பட்டுள்ளது இச்சம்பவம் திருகோணமலையில் நிகழ்ந்துள்ளது,


### சிறு விளம்பரம்

தேவை

சகல இன கோழிகளும் இறைச்சிக்குத் தேவை. நிதான விலை வழங்கப்படும் தொடர்பு கொள்ளும் விலாசம்: ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 04230


## ஆற்றலாளர் அரங்கு



ஜே.எல்.ஸ்பென்சர் புருனோ சென், பற்றிக்ஸ் மாணவன் 19 வயது நிறைந்த உற்சாகமும், துடிப்பும் இவரிடம் நிறையக் காணப்பட்டது. முகம் நிறைந்த சிரிப்புடன் காணப்பட்ட இவர், தனது கருத்துக்களைத் தெளிவாகக் கூறத் தொடங்கினுர்.

எனக்கு 4 ஏ வரும் என நம்பிக்கை இருக்கவில்லை அவ்வளவாக அதைநான் எதிர்பார்க்கவுமில்லை. க. பொ. த சாதாரண பரீட்சையில் நான் எதிர்பார்த்த அளவு திறமைச் சித்திகள் கிடைக்வில்லை. அதனுல் உயர்தரத்தில் எப்படியாவது அதிகளவு எடுக்கவேண்டும் என நினைத்திருந்தேன். அதற்காக வேண்டிய முயற்சி எடுத்தேன். அதேபோன்று எனக்கு 4 ஏ கிடைத்தது இது எனக்குச் சந்தோஷமாகவும், திருப்தியாகவும் இருந்தது தவிர இதைச் சாதனையாக நினைக்கமுடியாது.

நான் மருத்துவத் துறையில் உழைப்பை மட்டும் கருதி ஈடுபடமாட்டேன் சேவை உணர்வுடன் தான் செயற்படுவேன். முக்கியமாகக்'கான்சர்' நோயிலிருந்து மக்களைக் காபாற்ற வேண்டி இத்துறையிற் படித்து நிபுணத்துவம் பெறவேண்டும் என்பது தான் என் ஆசை. காரணம் எனது பாசத்திற்குரிய பெரியம்மா ஒருவரைக்'கான்சர்' நோயினுல் இழந்துவிட்டேன். அது என்னை வெகுவாகப் பாதித்தது எனவேதான் அத்துறையில் நிபுணத்துவம் பெறவேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டது. ஆனுல் என் பெற்ருேருக்கோ நான் பொறியியலாளராக வரவேண்டும் என்றுதான் ஆசை. ஆனுல் எனக்கு டாக்டராக வரவேண்டும் என்றுதான் இலட்சியம். எனவே என் சுய விருப்பத்தின் பேரில்தான் மருத்துவத்துறையைத் தேர்தெடுத்தேன். ஆனுல் என் இலட்சியத்திற்குப் பெற்ருேர் தடையாகஇல்லை.

சமகால நடவடிக்கையின்போது நானும் பாதிக்கப்படத்தான் செய்தேன் பலகாரணங்களால் நான் வீட்டில் இருக்க முடியவில்லை, எனது உறவினர் ஒருவரின் வீட்டிலே ஒரு வருடத்திற்கு மேலாக இருந்து படித்துவந்தேன். இப்போதுதான் வீட்டிற்கு வந்துள்ளேன்.

குழப்பங்களின் போது நான் இடம்விட்டுப்போக எத்தனிக்கவில்லை. காரணம், இரண்டு வருடமாகச் சிரமப்பட்டுப் படித்துவிட்டுப் பரீட்சை நெருங்கும்போது இடம்பெயர்ந்தால் என்படிப்புப் பாதியிற் பாழாகிவிடும் என்று எனக்குத்தெரியும். எனவே எப்படியும் பரீட்சைக்குத் தோற்றவேண்டும் என்பது தான் என் முழுமூச்சாக இருந்தது.

நான் பரீட்சைக்கென்று பிரத்தியேகமாகப் படிப்பதில்லை. க. பொ. த சாதாரண பரீட்சையில் இருந்தே ஆர்வமாகப் படிக்க வேண்டும் என்று ஆரம்பத்திலிருந்தே படித்துவந்தேன். எனவே பரீட்சையின்போது ஏற்பட்ட தடங்கல்களைச் சமாளித்து வெற்றிகொள்ளமுடிந்தது இருந்தும்நாட்டு நிலைமையால் விரக்தியும், மனச்சோர்வும் ஏற்படத்தான் செய்தன. நான் உறுதியுடன் செயற்பட்டதால் அதிகம் பாதிக்கவில்லை ஆனுல் ஒன்று கொழும்பு என்று போயிருந்தால் என் நண்பர்கள் பலர் கோட்டைவிட்டது போல் நானும் கல்வியைக் கோட்டைவிட்டிருப்பேன்... வெளிநாடு போவதற்கு எனக்கு ஆர்வமே இல்லை. அதோடு மருத்துவப் படிப்பிற்காக வெளிநாடு போவதற்கு என்னிடம் பொருளாதார வசதி இல்லை. புலமைப்பரிசில்கள் கிடைத்தால் போக நினைத்துள்ளேன்... ஆனுல்... அதிலும் அதிகம் விருப்பமில்லை.

நாட்டு நிலை சுமுகமாக இருந்து- என் போன்ருேர்க்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாதிருப்பின் நான் வெளிநாடு போவதை நினைத்தே பார்க்கமாட்டேன் புருனோவை. முரசொலி தட்டிக் கொடுப்பதுடன் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது.


## கொம்பியூட்டர் கல்வி

BASIC
dBASE III +
LOTUS 1. 2, 3
WORD PROCESSING

புதிய வகுப்புகள் 30 - 04 - 90 இல் ஆரம்பமாகின்றன

* Lectures by Members of the Institute of data Processing Management (London)
* Practical on I. B. M. (Compatibles)
* Fees may be paid in Instalments
* தமிழிலும் விளக்கங்கள்
* Valuable Certificate on Completion of Course

JOIN THE LEADERS

For Details

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16. 3rd Cross Street (O.L R தேவாலய மேற்குப்பக்கம்) யாழ்ப்பாணம்

04252

## ரமழான் போதனை

உலகெங்கனும் உள்ள இஸ்லாமிய முஸ்லிம் பெருமக்கள் இன்று தமது ரமழான் திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

கடந்த 40 நாட்களும் முஸ்லிம்களுக்கு ரமழான் நோன்பு மாதமாகும்.

இந்தப் புனித மாதத்தில்தான் வேத வாக்கான குர் ஆன் ஓதப்பட்டது.

சகல சமயங்களிலும் உண்ணு நோன்பு, விரதம் கடைப்பிடிக்கப்பட்டாலும்;

முஸ்லிம்களின் நோன்பு மாதத்திற்கு விசேட முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

நோன்பு ஆன்மீக, உடல் ரீதியாகப் பலத்தை அளிக்கின்றது.

நோன்பைக் கடைப்பிடித்தால் ஒரு தனி மனிதனுக்கு மட்டுமல்ல, ஓர் சமுதாயத்திற்குமே நன்மை பிறக்கிறது.

நோன்பு நோற்பவர்கள் பசித்திருக்கும் வேளைகள் அதிகம்.

இதனால் உடல் உறுப்புக்கள் பல மாற்றங்களை அடைகின்றன.

இதனால் இதுவரை காலமும் ஓயாது உணவை உண்டு வந்தவர்களின் வயிற்றிற்கு ஓய்வு கிட்டுகிறது.

இதனால் இரத்த அழுத்தம், இருதயக் கோளாறு, அதீத கொழுப்புப் போன்ற நோய்கள் மாறுவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

# இதயநாதம்

வெள்ளிக்கிழமை 27-04-1990

### நல்வாக்கு

தீயோருடன் இருப்பதைவிடத் தனிமையில் இருப்பது நல்லது. தனிமையில் இருப்பதைவிட நல்லோருடன் இருப்பது நன்று. மௌனமாயிருப்பதைவிட அறிவைத்தேடுவோருடன் உரையாடுவது நல்லது. தீய சொற்கள் பேசுவதைவிட மௌனமாயிருப்பது நல்லது.

நபிமணி

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

நோன்புக் காலத்தில் புகைத்தல், மது பானக் குடியை முஸ்லிம்கள் முற்றாகக் கட்டுப்படுத்துவார்கள்.

இதைத் தொடர்ந்து பலர் முற்றாகப் புகைத்தல், குடியை ஒழித்துள்ளனர்.

தனிமனிதன் நோன்பால் அடையும் நன்மை போலவே, சமூகமும் நோன்பால் நன்மையடைகிறது.

ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடின்றி சகல முஸ்லிம்களும் நோன்பு நோற்றே யாக வேண்டும்.

இதனால் பணக்காரர்கள் ஏழைகளின் பசி உணர்வை உணர்கின்றனர்.

இதன் காரணத்தால் ஏழைகளின் மேல் இரங்கி அவர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் பணக்காரர்களுக்கு உண்டாகிறது.

இந்த வகையில் இச்சைகளின் அடக்கத்தையும், தருமத்தின் சிறப்பையும் தாங்கி நிற்கிறது ரமழான் நோன்பு.

கடந்தகால வன்செயல்களின் போது வடக்கு - கிழக்கில் ஆயிரக்கணக்கான மக்கள் அன்றுடம் பட்டினி கிடந்தனர்.

இதே சமயம் இன்னும் பலர் மறு புறத்தில் உண்டு களித்திருந்தனர்.

இன்று நிலைமை சீராகினாலும், பலர் கடந்த கால அசம்பாவிதங்களிலிருந்து இன்னமும் மீட்சி பெறவில்லை.

பக்கத்து வீடு விட்டத்தோடு இறங்கி நில மட்டத்தோடு தரைமட்டமாகக் காணப்படுகையில் பக்கத்து வீட்டில் ஆடம்பரக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

உழைப்பாளிகளைக் குண்டுகளுக்கு இரை கொடுத்த குடும்பங்கள் பட்டினியாற் பரிதவிக்க பக்கத்து வீட்டில் பால் பாயாசம் குடிக்கப்படுகிறது.

அடுத்தவரின் துன்பங்களை உணராத இந்த வகை உளவியல் இம்சைகளை ரமழான் தினத்தில் நாம் விட முயற்சிப்போம்.

இன்றைய இளைஞர்கள் மத்தியில் போதை வஸ்து மது, புகைத்தல் பாவனை அதிகரித்து வருகிறது.

கல்லறைப் பாதையமைக்கும் சில்லறைப் போதைகளை இன்றைய இளைஞர்கள் கைவிட இன்றைய ரமழான் திருநாள் வழியமைக்கட்டும்.

# ஆன்மீகப் பயன் விளைவிக்கும் புனித ரமழான் நோன்பு

'தினமணி'

**மணவை முஸ்தபா**

இறைமறையாகிய திருக்குர்ஆன் பிறந்த ரமழான் மாதத்தின் இறுதியில் வரும் 'ஈதுல பித்ரு' என்னும் ஈகைத் திருநாள் உலகெங்கும் வாழும் நூற்றியிருபது கோடி முஸ்லிம்களால் உவப்புடன் கொண்டாடப்படும் பெருநாளாகும்.

இறை நம்பிக்கையாளர்களின் நெஞ்சத்தில் ஆன்மீக எழுச்சியையும், ஈகையுணர்வையும் மனக்கிளர்ச்சியையும் உருவாக்கி, மனிதர்களைப் புனிதர்களாக்கும் இறை மாதமாகவும் ரமழான் மாதம் அமைந்துள்ளது.

இஸ்லாமிய மாதங்கள் பன்னிரண்டில் ஒன்பதாவது மாதமான 'ரமழான்' மாதம் மட்டுமே இறைமறையாகிய திருக்குர்ஆனில் குறிப்பிடப்படுகிறது.

### பாவங்களைச் சுட்டெரிப்பது

'ரமழான்' என்ற சொல்லுக்கு 'சுட்டெரித்தல்' என்பது பொருளாகும். இம்மாதம் முழுவதும் நோன்பு நோற்றும் 'தராவீஹ்' என்னும் கூட்டுத்தொழுகைகள் மூலம் மிக அதிகமாக இறை வணக்கம் புரிந்தும் தாங்கள் தெரிநதோ, தெரியாமலோ செய்த பாவங்களையெல்லாம் சுட்டெரிப்பதால் இம்மாதம் 'ரமழான்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

நபிகள் நாயகத்துக்கு 'ஜிப்ரீல்' என்னும் வானவர் மூலம் முதல் இறைச்செய்தி இம்மாதத்தின் இருபத்தியேழாம் நாளன்றுதான் இறைவனால் அருளப்பட்டது. அந்த நாள் 'லைலத்துல் கத்ர்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த அரபுச் சொல்லுக்குக் 'கண்ணியமான இரவு' என்பது பொருளாகும்.

''கண்ணியம் மிக்க இந்த லைலத்துல் கத்ர் இரவு ஆயிரம் மாதங்களைவிட மேலானதாகும்'' என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

### இறைவனால் வழங்கப்பட்டது

திருக்குர்ஆன் மட்டுமல்லாது வேறு பல வேதங்களையும் நபிமார்களாகிய இறைத்தூதர்கள் மூலம் இறைவன் உலகுக்கு வழங்கியதும் இதே ரமழான் மாதத்தில்தான்.

'ஏப்ரஹாம்' என அழைக்கப்படும் இபுருஹீம் நபி அவர்கட்கு 'சுஹ்பு' என்னும் வேதம் இதே ரமழான் மாதத்திலேதான் அருளப்பட்டது. அதன் பின் எழுநூறு ஆண்டுகள் கழித்து 'மோசஸ்' எனும் மூஸா நபி அவர்கட்கு 'தௌராத்' எனும் வேதம் இதே ரமழான் ஆறும் நாளிலேதான் இறைவனால் வழங்கப்பட்டது. அதற்கும் ஐந்நூறு ஆண்டுகள் கழித்து 'டேவிட்' எனும் 'தாவூது' நபி அவர்கட்கு 'சபூர்' எனும் இறைவேதம் இதே ரமழான் பன்னிரண்டாம் நாளன்று இறக்கியருளப்பட்டது. அதன்பின் ஆயிரத்திருநூறு ஆண்டுகள் கழிந்த பின்னர் 'ஜீசஸ்' எனப் போற்றப்படும் ஈசா நபிக்கு 'இன்ஜீல்' எனப்படும் 'பைபிள்' வேதம் ரமழான் பதினெட்டாம் நாளில் அருளப்பட்டது.

அதன் பின்னர் அறுநூறு ஆண்டுகள் கழித்து 'புர்க்கான்' எனும் திருக்குர்ஆன் திருமறை, நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் மூலம் உலகுக்கு ரமழான் இருபத்தியேழாம் நாளன்று இறக்கியருளப்பட்டது.

ரமழான் மாதத்தின் மற்றொரு சிறப்பு மக்கள் கடைத்தேற்றத்திற்கென அல்லாஹ் விதித்த இறை நம்பிக்கை எனும் கலிமா, தொழுகை, நோன்பு, ஏழைவரி எனும் ஜக்காத், மக்காவிலுள்ள கஃபானும் இறையில்ல வணக்கத்திற்கெனச் செல்லும் ஹஜ் எனும் ஐம்பெரும் இஸ்லாமியக் கடமைகளில் 'ஹஜ்' தவிர்த்துள்ள நான்கு கடமைகளும் ஒருசேர முற்றாக நிறைவேற்றப்படுவதும் இந்த ரமழான் மாதத்திலேதான்.

இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகளில் மூன்றுவதான 'நோன்பு' ரமழான் மாதத்தில்தான் முழுமையாக நிறைவேறறப்படுகின்றன.

### விரதம்

உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களும் நோன்பாகிய விரதத்தை வலியுறுத்துகின்றன. இந்தியாவிலுள்ள ஹிந்துமதம் போன்ற பெரும் சமயங்கள் விரதமிருப்பதை சமயத்தின் இன்றியமையாச் சிறப்புக் கூறாக அமைத்து, பின்பற்றியொழுகப் பணிக்கின்றன. ஹிந்து சமயத்தவர்களும் விரதமிருப்பதைப் புனித கடமையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

இஸ்லாமிய நோன்புக்கும் பிற சமய விரதங்களுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு.

பிற சமயங்களில் மாதத்தில் ஒரு நாளோ அல்லது ஒரு சில நாள்களோ அல்லது வாரத்தில் ஒரு நாளோ அல்லது ஒரு சில மணி நேரங்களிலோ விரதம் கடைப்பிடிக்கப்படுகின்றது. அதிலும் வழக்கமாக உண்பவைகளில் சிலவற்றை நீக்கியோ அல்லது முழுமையாக உணவு மட்டும் உண்ணாமலோ விரதம் மேற்கொள்ளப்படுகின்றது. பெரும்பாலான விரதங்களில் நீர் பருகத் தடையிருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், இஸ்லாமிய நோன்பு ரமழான் மாத முதல் நாள் தொடங்கி, அம்மாதம் முழுவதும் இடையறாது தொடர்ந்து நோன்பு நோற்கப்படுகின்றது.

அதிகாலை நான்கு மணிக்கு முன்னதாகவே, உண்பது—

—7 ஆம் பக்கம் பார்க்க




### மௌலவியின் செய்தி

இன்று ஈதுல் பெருநாளை இஸ்லாமிய மக்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். முஸ்லிம்கள் அனைவரும் சாந்தி சமாதானத்தோடு ஒற்றுமையாக வாழ்ந்து இந் நன்நாளிலே பைதுல் முகத்தஸ் பள்ளிவாசலை மீட்டு எடுப்பதற்கும், உலகமுஸ்லிம்கள் அனைவரையும் பிரார்த்தனை புரியுமாறு வேண்டுகிறேன்.

மௌலவி. எம். ஏ. சி. ஜலீல், பெரிய முகைதீன் ஜாம்மா - பள்ளிவாசல், யாழ்ப்பாணம்,

786 உலகெங்குமுள்ள இஸ்லாமிய சகோதரர்கள் புனித ரமழான் பெருநாளை கொண்டாடுவதை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது. 786

# செய்தி மஞ்சரி

## கி.சே. பிரிவு விஸ்தரிப்பு

நிர்வாகத்தைப் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் தமனை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 12 கிராம சேவையாளர் களின் பிரிவுகளும் தற்போது 33கிராமசேவையாளர்கள் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு கிராம சேவையாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் புதிய நடைமுறை தொடர்பாக தமனை உதவி அரசாங்க அதிபர் திரு கயம்பதி ஒரு பயிற்சி நெறியையும் நடாத்தியதோடு தற்போது கிராமசேவையாளர்களுக்குள்ள பொறுப்புகளையும் விளக்கியுள்ளார்.

## ஜனாதிபதி செயலகம் பதில்

கஷ்டப் பிரதேச ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குமாறு கோரி மட்டக்களப்பு ஆரம்ப நீதிமன்ற ஊழியர்கள் சார்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜர் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திலிருந்து பதில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்மகஜர் நீதியமைச்சின் செயலாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக இப்பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. உதவி கிடைக்கும்

வடக்கிலுள்ள ஏழாயிரம் முறை சாரர்க் கல்விப் பிரிவு ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கு ஐ நா அபிவிருத்தித் திட்டம் உதவி வழங்க உறுதியளித்ததோடு பயிற்சியளிக்கும் போதனாசிரியர்களின் சம்பளத்தையும், பயிற்சியளிப்பதற்கு வேண்டிய உபகரணங்களையும் மறுவாழ்வு அமைச்சினூடாக வழங்கவும் ஒப்புக் கொண்டுள்ளது.

பயிற்சி அளிப்பதற்குச் சுமார் 45 இலட்சம் ரூபா தேவை என்று குழுவிடம் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மேற்கண்ட உறுதியை வடபகுதிக்குச் சென்ற ஐ. நா அபிவிருத்தித் திட்டக் குழு அளித்திருக்கின்றது.

## 'ரேடியோ மோஸ்கோ' பிரதிநிதி

தமிழ், சிங்களம் உட்பட இன்று எழுபத்தியேழு உலக மொழிகளில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிவரும் ரேடியோமொஸ்கோ கொழும்பில் இன்று நிகழ்ச்சி தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை நடத்துவதற்கு விசேஷ தூதுக்குழு ஒன்றினை அனுப்பியுள்ளது இத்தூதுக்குழு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடனும், தகவல் ராஜாங்க அமைச்சருடனும் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளவிருக்கின்றது. இத்தூதுக் குழுவினர் நேயர்களைச் சந்தித்தும் உரையாடவுள்ளனர்.

## குளங்கள் புனரமைப்பு

சமநல சேவைகள் திணைக்களத்தின் மூலம் யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் பன்னிரண்டு குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. இக்குளங்களின் புனரமைப்பு வேலைகளுக்கான அமெரிக்க உதவி நிறுவனம் பதினைந்துலட்சம் ரூபாவையும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் யாழ் மாவட்டத்தில் மூன்று குளங்களை புனரமைப்பதற்கு மூன்று இலட்சத்து எழுபதாயிரம் ரூபாவையும், ஐந்து விவசாய வீதிகளைச் சீரமைக்க இரண்டு இலட்சத்து எண்பத்தோராயிரம் ரூபாவையும் வழங்க முன் வந்துள்ளது.


வாடிக்கையாளர்களுக்கு எமது புனித ரமழான் வாழ்த்துக்கள்



தற்கால நாகரிகத்திற்கேற்ப
நவீன டிசைன்களில்
கோட்
சூட்
ஜீன்ஸ்
சோட்ஸ்
சேட்
மற்றும் சிறுவர் ஆடைகள் சிறந்த முறையில்
தைத்துக் கொள்ள

முபீன் ரெயிலர்ஸ்
104 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
(மீண்டும HAPPY TEX இன் மேல்மாடியில் எமது நிறுவனம் வழமைபோல் இயங்குகிறது.)
04241


# உயிருள்ளவரை கட்சிக்குள் பிரச்சினை எழ இடமளியேன்

### -சு. க. தலைவி சிறிமா சொல்கிறார்

'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவிக்கு என் மகனை அல்லது மகளை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை நான் மேற்கொள்ளமாட்டேன்'

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும், எதிர்க்கட்சித்தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா கூறினார்.

சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் கூட்டம் அண்மையில் களுத்துறை நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அவர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'தலைமைப் பொறுப்பை அடைய வேண்டுமெனில் மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். நான் பலவந்தமாகக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கவில்லை. மக்கள் தான் அப்பொறுப்பை எனக்கு தந்தார்கள்.

நான் உயிரோடு உள்ள வரை கட்சியினுள் பிரச்சனைகள் ஏற்படுவதற்கு இடமளிக்கமாட்டேன் வெறும் வாய்ப் பேச்சுக்களாலும், சண்டையிடுவதாலும் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது. என்றார்.

## யாழ் மக்கள்வங்கிக் கிளையில் ஞாயிறு நிவாரணக்கொடுப்பனவு

யாழ்- மக்கள் வங்கிப் பிரதான வீதிக் கிளையில் ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணி தொடக்கம் 1 00 மணிவரை உற்பத்தி முயற்சிக்கரன நன்கொடைப் பணமும், வீடுதிருத்துவதற்கான நன்கொடைப் பணமும் பின்வரும் பிரிவுகளுக்குக் கொடுக்கப்படவுள்ளன.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை உடுவில் தெற்கு கரவெட்டி யாழ்ப்பாணம் நல்லூர்.

அவ்வப் பகுதிக் கிராம சேவையாளர்களுடன் தொடர்புகொண்டு வங்கிப் பதிவு இலக்கத்தினைப் பெற்று வருமாறு தெரிவிக்கப்படுகின்றது.

## திறந்த பல்கலைக்கழக உப வேந்தர் யாழ் வருகை

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் தயந்தா விஜய சேகரா பிராந்தியக் கல்வி சேவை பணிப்பாளர் எல். பி. சமரக்கோன் ஆகிய இருவரும் யாழ். வரவுள்ளனர்

நாளை சனிக்கிழமை காலை 10 30 மணிக்கு இவர்கள் யாழ் திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தில் மாணவர்களைச் சந்திக்கவுள்ளனர்.

## கான்ஸ்டபிளுக்கு 4மாதக் கடுழியச் சிறை

வஞ்சக் குற்றச் சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த மாஜி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் குற்றவாளி என, ஒப்புக் கொண்டார்.

இவருக்கு நான்கு மாதக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமீர் இஸ்மயில் தீர்ப்பளித்தார்.

## வேலணையில் நாடகம்

வேலணை தெற்கு துறையூரில் கலாநிதி மௌனகுருவின்," தப்பி வந்த தாடி ஆ" டுஎன்னும்சிறுவர் நாடகம் அரங்கேற்றப்பட்டது

இந்த நாடகத்தின்நெறியாள்கையை வேலணையூர்தாஸ் மேற்கொண்டிருந்தார், இந்தநாடகத்தை பெரியவர்கள் சிறியவர்கள் உட்பட பலர் வெகுவாக ரசித்தனர்.

## விலைகள் விஷம்போல் ஏறுகிறது

நோன்பு பெருநாளை முன்னிட்டு இந்திய சாரம் வொயில் சேலை என்பனவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன,

கடந்த மாதம் 175 ரூபாவுக்கு விற்கப்பட்ட இந்திய சாரம் தற்போது 265 ரூபாவாகவும் 150 ரூபாவுக்கு வாங்கக் கூடியதாக இருந்த வொயில் சாறி 250 ரூபாவுக்கு மேலாகவும் விற்கப்படுகின்றது.

### நாளை மீளக் குடியமர்தல்

## நிவாரணம் பின்வரும் இடங்களுக்குக் கிடைக்கும்

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையின் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை மீளக் குடியமர்தல் 2ஆம் கட்ட நிவாரணக் கொடுப்பனவு ரூபா 1,000 வழங்கப்படவிருக்கும் இடங்களின் விபரம் பின்வருமாறு.

அரியாலை கிழக்கு, அரியாலை மத்தி, வண் வடமேற்கு, வண் வட-கிழக்கு. கந்தர் மடம், நல்லூர் வடக்கு திருநல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்மேற்கு கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் மத்தி.

ரேயடி வங்கிக் கிளையில் மீளக் குடியமர்தல் நிவாரணம் ரூபா 2.000 வழங்கப் படவிருக்கும் இடங்களின் விபரம் பின்வருமாறு; கொழும்புத்துறை, அத்தியடி, கண்டுக் குளி, குருநகர் மேற்கு, குருநகர் கிழக்கு, யாழ் பட்டினம், பெரியகடை, கொட்டடி, நாவாந்துறை, சோனகத் தெரு, அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு, அரியாலை மத்தி, நல்லூர் வடக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கந்தர்மடம்.

மேற்படி வங்கிக் கிளையில் உற்பத்தி முயற்சி நன்கொடை ரூபா 4,000 வழங்கப்படவிருக்கும் இடங்களின் பெயர்கள்: கந்தர்மடம், திருநெல்வேலி கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் மத்தி கோண்டாவில் கிழக்கு, வண்-வட-மேற்கு. வண். வட-கிழக்கு, நல்லூர் தெற்கு, நல்லூர் வடக்கு, அரியாலை மத்தி,

மேற்படி கொடுப்பனவுகள் பெறத் தகுதியானவர்கள் தங்கள் பகுதிக் கிராமசேவையாளருடன் தொடர்பு கொண்டு வங்கிப் பதிவு இலக்கத்தினைப் பெற்றுக்கொண்டு வந்து, கொடுப்பனவை இத்தினத்தில் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் திரு. செல்லப்பா சம்பந்தநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மின்விநியோகம் இன்னும் இல்லை

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு முக்கிய இடமாக விளங்கும் இயக்கச்சிப் பகுதிக்கு மின்சார விநியோகம் இன்னமும் வழங்கப்படாததுகுறித்து இயக்கச்சிப் பகுதியில் உள்ள பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்திற்கு நீர் வழங்கும் தண்ணீர்த்தாங்கி இயக்கச்சியில் உள்ளது இதற்கு இயக்கச்சி பொதுச் சந்தைக்கு அண்மையில் இராது "ரான்ஸ்போமர்" ஒன்றினூடாகவே மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. (43)


எமது வாடிக்கையாளர், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இனிய ஈதுல் பிதிர் நல்வாழ்த்துக்கள்.

சுவையான சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்பட்ட மட்டன்ரோல், கட்லட், பற்றீஸ், பேர்ண்டா மற்றும் சிற்றுண்டி வகைகளுக்கும், தேனினுமினிய ஐஸ்கிறீம், சர்பத் மற்றும் குளிர்பான வகைகளுக்கும்

உங்கள் நினைவில்
நிறைந்திருக்கும் ஸ்தாபனம்

★ ரவி ★
கோப்பி & கூல்பார்
324 மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம்
(வெலிங்டன் தியேட்டர் முன்பாக)
04246

# எல்லைப் பகுதிகள் காப்பதில் புலிகள் மிகுந்த விழிப்பு

**- கரிகாலன்**

'இலங்கை அரசுடனுன பேச்சுவார்த்தையில் வட-கிழக்கு மகாணத்தில் எவ்விதக் குடியேற்றமும் நடைபெறக் கூடாதுஎன்று தெளிவாகஎடுத்துக் கூறியுள்ளோம்'' என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித்தலைவர் திரு. எஸ் கரிகாலன் கூறினுர்.

கெவிறியாமடு அகதிகளின் எதிர்காலம், மீளக்குடியமர்த்தல் ஆகியவை தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறுகுறிப்பிட்டார்.

'அரசு எமது கோரிக்கையை மீறி குடியேற்றங்களைச் செய்யுமாஞல் நாமும் குடியேற்றங்களைச் செய்வோம் என்றும் அரசுச்குக் கூறியுள்ளோம்'' என்றும் சொன்ஞர் அவர்.

''நமது எல்லைப்பிரதேசங்களைப் பாதுகாப்பதில் விடுதலைப் புலிகள் மிகவும் விழிப்புடன் இருக்கிருர்கள். நமதுஒற்றுமையின் மூலமே இதை உறுதி செய்யமுடியும் இப்போது ஏற்பட்டுள்ள அமைதியான சூழலைப் பயன்படுத்தி எல்லைக்கிராமங்களில் வாழ மக்களுக்குப் பாதுகாப்புஏற்படுத்தப்படும்'' என்றும் திரு கரிகாலன் கூறினுர்.

அரசாங்க அதிபர் திரு கே. யோகநாதனும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

## ராணுவம், பொலிஸ்; மீளக் குடியேற மக்கள் அச்சம்

கெவிலியாமடுப் பகுதியில் இராணுவமுகாம், பொலிஸ் நிலையங்கள் என்பன உள்ளதாகவும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினுல் அங்கு கட்டப்பட்ட 55 வீடுகளில் ஊர்காவல் படையினரின் குடும்பங்கள் வசிப்பதாகவும் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள், அங்கு விஜயம் செய்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. எஸ். கரிகாலனிடம் முறையிட்டனர். தகுந்த பாதுகாப்பு உத்தரவாதம் இருந்தால் தவிர மீளக் குடியேறுவது அச்சமாக உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். இக்கிராமத்திலிருந்து அச்சத்தால் இடம் பெயர்ந்த 186 குடும்பங்கள் இப்போது மாவடி முன் மாதிரிப் பாடசாலையில்அகதிகளாக இருந்துவருகின்றனர்.

## கோட்டை ரயில் நிலையத்தில் மட்டு. இளைஞர் சுடப்பட்டார்

நேற்று முன் தினம் இரவு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து மட்டக்களப்பு இளைஞரான பத்மநாதன் என்பவர் இனம் தெரியாதோரால் சுடப்பட்டு காயங்களுடன் கொழும்பு ஆஸ்பத்திரியில் பொலிசாரால் அனுமதிக்கப் பட்டுள்ளார்,

இவர் மட்டு தபால் ரயிலில் பயணம் செய்வதற்கு ஏறும் போதே சுடப்பட்டார். (05)

## நாளையும் மறுதினமும் பொலிஸ் நேர்முகப் பரீட்சை நடைபெருது

யாழ் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்று வரும் பொலிஸ் நேர்முகப்பரீட்சைகள் 27ம் திகதியும் 28ம் திகதியும் நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் இந் நேர்முகப் பரீட்சைகள் 29ம் திகதி ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (3)


புனித ரமழான் வாழ்த்துக்கள்

கோவில்களுக்குத் தேவையான பட்டுக் குடைகள், பூஜை மணிகள். பெரியமணி, கிடாரம், விளக்குவகைகள், குடம், தீபம் எவர்சில்வர் பித்தளை அலுமீனியப் பொருட்கள். விளையாட்டுக் கேடயங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் தன்னிகரில்லா தலைசிறந்த ஸ்தாபனம்

**ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ்**

எலக்ரோ பிளேட்டிங் செய்து கொள்ளவும்! வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட எல்லாவகை மோட்டார் சயிக்கிள்களுக்கும்

**'ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ்**

297, கே: கே. எஸ். ரோட் யாழ்ப்பாணம்

04247


## வல்வை வர்த்தகர் சங்கத் தெரிவு

அண்மையில் வல்வை வர்த்தகர் சங்க உத்தியோகத்தர் தெரிவு வல்வைக்கல்வி மன்றத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மக்கஅ முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. குணம் தலைமையில் நடைபெற்றது.

தெரிவுபெற்ரேர் விபரம் பின்வருமாறு:- தலைவர்; திரு. மு பிறேம்குமார். செயலாளர்: திரு. வ. பழனிவேல், பொருளாளர்: திரு.இ யோககுரு, உப. தலைவர் வி. சக்திவேல், உப செயலாளர்:- ஆ இரத்தினவேல்.

நிர்வாக உறுப்பினர்களாக: செ தெய்வச்சந்திரன். கு. அப்பாத்துரை, த. மகேந்திரன், க. பத்மநாதன், இ ஞானகுரு, ந. திருநாவுக்கரசு, சி. சோமசுந்தரம், யோ. ஆனந்தமயில், இ. சுந்தரலிங்கம், ஆ. அருணபரன் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். (39)

## மாடுகளினுல் பயிரழிவு

கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை கட்டாக் காலியாக திரியவிட வேண்டாமென கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

விவசய பிரதேசமான இப் பகுதியில் இக்கட்டாக்காலி மாடுகள் பயிர்களை அழித்து வருவதஞலேயே மேற்படி சங்கத்தா ! இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன், இம் மாடுகளை பிடிப்பதற்காக இருவரை நியமனம் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (41)


அனைவருக்கும் எமது உள்ளம் நிறைந்த ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்.

யாழ்நகரில்

சுத்தமான, சுகாதாரம் நிறைந்த இனிய ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள், குளிரூட்டப்பட்ட சோடா வகைகள். மற்றும் மட்டன் ரோல், கட்லட். பற்றீஸ், கேக் ஸ்விட்ஸ வகைகள் முதலிய சிற்றுண்டி வகைகளுக்கும்

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

73, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

04248


## முஸ்லிம் பகுதி செய்திகள்

### ஈரான் பேரீச்சம்பழம் வந்தது

வர்த்தக அமைச்சர் ஜனுப் மன்சூர் மற்றும் முஸ்லிம் கலாசார இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச், எம். அஸ்வர் அவர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியின் பேரில் ஏறக்குறைய 500 கிலோ எடையுள்ள பேரீச்சம்பழம் புத்தளம் நகர பிதா அல்ஹாஜ் எம்' ஐ. பிஸ்ருல் ஹாபி அவர்களுக்கு ஈரானியத் தூதரகம் வழங்கியுள்ளது.

### அஹதிய்யா நாளை திறக்கப்படும்

புத்தளம் அஹதிய்யா சன்மார்க்கப் போதன பீடம் விடுமுறைக்குப் பின் மீண்டும் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் மாணவர்களும். ஆசிரியர்களும் ஒன்றுகூடி நோன்புப் பெருநாளின் சிறப்பை வெளிக்காட்ட ஏற்ற நடைமுறைகளைக் கைக் கொள்ளவிருக்கின்றனர்.

### அரபுக்கல்லூரிக்குபுதியமாணவர்

கம்பஹா மாவட்டத்தில் மிகச் சிறந்த அரபுக் கல்லூரிகளில் ஒன்ருகத் திகழ்ந்து வரும் உடுகொடை அல்ஹஸனியா அரபுக் கல்லூரிக்கு 1990-ஆம் ஆண்டிற்கான மாணவர்களைச் சேர்க்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### இன்று பரீட்சை இல்லை

நோன்புப் பெருநாளாகிய இன்றைய தினம் பரீட்சைகள் எதுவும் இடம்பெறமாட்டா. போரதனைப் பல்கலைக்கழகம் நடத்த இருந்த வெளிவாரி கலைப்பட்டதாரி பரீட்சை வேறு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வெளிவாரி கலைப்பட்டதாரி பரீட்சையில் புவியியல் பாடம் ரமழான் பெருநாளாகிய இன்று நடைபெற இருந்தது என்பது குறிப்பிடத்தக்தது.

### புத்தளத்தில் நூலகம்

புத்தளம் முஸ்லிம் நலன் புரிச்சங்கம் க. பொ. த. சாதாரணதர உயர்தர மாணவர்களின் நலன்கருதி நூல் நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது

இதஞல் புத்தளம் பகுதி மாணவர்கள் நூல்களை தேடிப் பெற்றுக் கொள்வதில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஹல்புல்லாஹ் ஈரான் பயணம்

ஹல்புல்லாஹ் ஈரான் பயணம் செய்கிருர். உலக முஸ்லிம் தலைவர்களின் கவனத்துக்கு முஸ்லிம்களின் நிலைமையைக் கொண்டுவந்து உடனடி நிவராண நடவடிக்கைகளை மேற்கொள்ள வைப்பதற்காகவே ஹிஸ்புல்லாஹ் அவர்கள் இந்தத் திடீர்ப் பயணத்தை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது


### 'தேசமானி' விருது

அகில இலங்கை முஸ்லீம்களின் நேசமிகு தலைவர் கலாநிதி காயிதே மில்லத் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் மாண்புமிகு ஜனுதிதி பிரேமதாஸ அவர்களால் இலங்கையின் அதிகௌரவ பட்டமான 'தேசமானி' விருது வழங்கிக் கௌரவிக்கபடவுள்ளார்.

### ரமழான் உளத்தூய்மை தரும்

எம்மை விட்டுப் பிரியும் தறுவாயிலுள்ள புனித ரமழான் மனிதனுக்கு ஆன்மீகப் பயிற்சியை அளிப்பதுடன் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தி அதில் ஆத்மீக பலத்தை ஓங்கச் செய்கிறது. இதஞல் மனிதர்களிடம் கூடாத பண்புகள் அகற்றப்படுகின்றன. இறை சட்டங்களை மதிக்கும் தன்மை ஏற்பட்டு இறைவனின் அன்பிற்கும் மனிதன் ஆளாகின்ருர். என பாணந்துறை தொட்டவத்தை ஜும் ஆப்இமாம் மௌலவி அல்ஹாஜ் எஸ். ரி. மஹ்ரூப் (பஸஹி) அவர்கள் தெரிவித்துள்ளார்.


அனைவருக்கும் ஈகைப் பெருநாள் வாழ்த்துக்கள்




**ஆப்தீன்**

ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை யாழ்ப்பாணம்

04244

# உதவி அரசாங்க அதிபர்களுக்கு கச்சேரி அலுவலக அதிகாரம்

உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் என்று அண்மைக் காலம்வரை அழைக்கப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு கச்சேரிகளின் அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்காக மே மாதம் இருபதாந்திகதிக்கு முன்னர் போதிய அதிகாரிகள் பிரதேசச் செயலாளர்களுக்கு நியமிக்கப்படுவர்.

உதவி அரசாங்க அதிபர்கள் பிரதேசச் செயலாளர்களாக பதவிப்பெயர் மாற்றம் செய்யப்பட்டு கடந்த அக்டோபர் மாதம் முதல் மாகாண சபைகளின் கீழ் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆயினும் பிரதேச செயலாளர்களுக்குப் பிரதேச நிர்வாகத்திற்குத் தேவையான அதிகாரங்கள் வரையறுத்துக் கொடுக்கப்பட்டு இருக்கவில்லை.

## சுவையான செய்திகள்

### உலகில் பெரிய முத்து

உலகிலே மிகப்பெரிய முத்து 1934 மே 7-ம் திகதியன்று பிலிப்பைன்ஸ் தீவில் கண்டெடுக்கப்பட்ட 'லாவோட்சே' என்ற முத்துத்தான். இதன் எடை என்ன தெரியுமா 6.37 கிலோ கிராம் இந்தப் பிரமாண்டமான முத்தின் விலை ரூபா 3,26,40,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### ஒன்பதாவது மாதம் சீனவில்..

ஒவ்வொரு வருடமும் ஒன்பதாவது மாதத்தின் ஒன்பதாவது நாளன்று சீனவில் காற்றுடிகள் பறக்க விடுகின்றார்கள். அதனால் துர்தேவதைகளை நெருங்க விடாமல் செய்ய முடியுமென்பது அவர்களது நம்பிக்கை!

### ஆணும் ஆணும்..,பெண்ணும் பெண்ணும்..

டென்மார்க்கில், விரும்பினால் ஆணும் ஆணும், பெண்ணும், பெண்ணும் திருமணம் செய்து கொள்ளலாம். இந்த மாதிரித் திருமணத்தைக் 'ஹேய் மரேஜ்' என்பார்கள். இதை உலகிலே முதன் முதலாக அனுமதித்தது டென்மார்க் நாடு தான்.

### ரொட்டிக்கு ஒரு மியூசியம்

நாம் உண்ணும் ரொட்டிக்குக் (பாண்) கூட மியூசியம் உள்ளது. ஜெர்மனியில் இருக்கும் இந்த மியூசியத்தில் உலகின் பல பகுதியிலிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரொட்டிகளைச் சேகரித்து வைத்திருக்கின்றார்கள்.

## தீவிரம்

சங்கானை கால் நடை வைத்திய அதிகாரி பிரிவுமாடுகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பு ஊசி மருந்து போடும் திட்டம் தீவிரமாகசெயற்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் சண்டிலிப்பாய்,சங்கானை, பண்டத்தரிப்பு பனிப்புலம், பெரிய விளான் ஆகிய இடங்களில் சங்கானை கால் நடை வைத்திய அதிகாரியினால் ஆயிரத்து இருநூறுமாடுகளுக்கு கோமாரி நோய்த்தடுப்பு ஊசி போடப்பட்டது. (13)

## திடீர் குபேரர் சூப்புற விழுவர்

திடீரென குபேரர்களாகி இருப்போரின் வருமான வழிகளைப் பற்றித் தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இத்தகவலை லஞ்ச ஆணையாளர் திருமதி நெலும்கமகே வெளியிட்டார்.

ஏற்கனவே பலர்மீது விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கெருடாவில் கலையரசி ச. ச. நிலையவிழா

கெருடாவில் தெற்கு கலையரசி சனசமூக நிலையத்தின் 2வது வருடாந்தவிழாவும் ,புதிய கட்டிடத்திறப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் திரு எம். தம்பித்துரை தலைமையில் நடைபெறவுள்ளது

அரிச்சந்திரா நாடகமும் இடம் பெறவுள்ளது.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### பயிர்களை அழிக்கும் பணக்கார மாடுகள்

ஆசிரியர்
முரசொலி,

உருத்திரபுரம் பகுதியில் சில வசதி படைத்தவர்களின் ஆடு, மாடுகள் ஏழை விவசாயிகளின் பயிர்களை நாசம் செய்து வருகின்றன. எவ்வித கட்டுப்பாடுமின்றி இவர்கள் தங்கள் ஆடு, மாடுகளை மேயவிடுகின்றார்கள்.

காலையிலும் மாலையிலும் இவற்றில் பால்கறப்பது மட்டுமே இவற்றின் உரிமையாளர்களின் தேவையாக உள்ளது மற்றும்படி இவை இரவு பகலாக பக்கத்திலுள்ளோரின் பயிர்களையே பதம் பார்க்கின்றன. இதனால், வசதிகுறைந்த விவசாயிகள் மிகவும் பாதிப்புறுகின்றனர்.

இவர்களின் நியாயக்குரல் பணக்கார விவசாயிகளின் காதுகளில் நுழைவதே இல்லை. இப்பிரச்சினை தீர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.?

உருத்திரபுரம் — எஸ். அந்தோனிபிள்ளை

### வீதிஒழுங்கு ஊழியர் 'பிரேக் டான்ஸ்' ஆடுகிறாரா?

ஆசிரியர்
முரசொலி

25-ம் திகதி காலை 10 மணியிலிருந்து 11 மணிவரை யாழ் நகரில் வீதி ஒழுங்கு நடவடிக்கையில ஈடுபட்டிருந்த ஊழியர்களை அவதானித்தபோது அவர்களின் போதிய பயிற்சி இல்லாமை தெரியவந்தது.

கே. கே. எஸ். வீதி மானிப்பாய்வீதிச் சந்தியில் நின்ற ஊழியர்'பிரேக்டான்ஸ்' ஆடினாரா? சமிக்கை கொடுத்தாரா என்று தெரியவில்லை அவர் தனது வலதுகையை மடித்துத் தனது தோளுக்குப்பின்னால் காட்டினார். அது என்ன சமிக்கை என்று எனக்கு விளங்கவில்லை (உங்களுக்குத் தெரியுமா?)

சிவன்கோயிற் சந்தியில் நின்ற ஊழியரைக் காணவில்லை: ஒரு மோட்டார் சயிக்கிள் கோயில் தாண்டி நகர்நோக்கிச் சென்றபின் எங்கோ ஒதுங்கிநின்றுவிட்டு வந்து விசில் கொடுத்தார். (பாவம் இந்த வெயிலில் என்ன செய்வார்?

வெலிங்டன் சந்தியில் நின்ற இருவரும் ஆளுக்கு ! ஒரு சமிக்கை கொடுத்தனர் அவர்களின் சமிக்கைகளை மீறித் நூவிச்சக்கர வண்டிகள் முந்திச்சென்றன. (இதேபோல் பருத்தித்துறைவீதி, ஆஸ்பத்திரிவீதிச் சந்தியிலும்.

இவர்கள் செய்வதைவிடச் சிக்னல் விளக்குகள் திறம்படச் செயற்படும் யாழ்மாநகரசபை இவர்களுக்குப் போதிய பயிற்சியைக் கொடுத்ததன் பின்னர் இவர்களைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டும் அல்லது கொழும்பிலும், பிறநாடுகளிலும் உள்ளதுபோல் முக்கிய சந்திகளிற் சிக்னல்' விளக்குகளைப் பொருத்தவேண்டும்.

வழக்கம்பரை,
சுழிபுரம். — எஸ். ஆனந்தி

## 4000 ரூபா நிவாரணம் வழங்க 4 கோடி ரூபா உடன் தேவை

யாழ். மாவட்டத்தில் 4000 ரூபா நிவாரணக்கொடுப்பனவு வேலைகளுக்கு உடனடியாக 400 லட்சம் ரூபா தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது

இப்பணத்தை வழங்கும்படி யாழ் அரசாங்க அதிபர் புனர்வாழ்வு அமைச்சரிடம் கேட்டுள்ளார். இன்று கொழும்பில் நடைபெறும் புனர்வாழ்வுபுனரமைப்புக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்படுமெனத் தெரியவருகின்றது(3)

"தொழிற் பயிற்சிகள்"

★ ரேடியோ ரெலிவிஷன் வீடியோ டெக் றிப்பயறிங்
ரெலிவிஷன், ரேடியோ, வீடியோ டெக், திருத்தும்முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் : 4 மாதம்

★ றீவைண்டிங்
மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

★ எலெக்றிக்கல் வயறிங்
வீட்டுமின்சாரவேலை,மின்சாரப்பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்
காலம்-: 2 மாதம்

★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP
காலம் 4 மாதம்

மீண்டும் ஆரம்பம்: 30.04.90 (கிழமை நாட்கள்)
29.04.90 (சனி ஞாயிறு)

வேலை செய்வோர்களிற்கு சனி, ஞாயிறு மாலைநேரவகுப்பு நடைபெறும்.

JAFFNA TECHNICAL INSTITUTE
ஸ்ரான்லிவீதி,(றெயில்வேகடவை அருகாமையில்) யாழ்ப்பாணம்
04234

புனித ஈதுல் பித்ர் வாழ்த்துக்கள்

யாழ் நகரில்
அன்றும்
இன்றும்
என்றும்

சிறந்த முறையில் படம் பிடிப்பவர்கள்

பாரத் ஸ்ருடியோ

82/1, கஸ்தூரியார் ரோட் யாழ்ப்பாணம்
04245

## ஆன்மீகப் பயன்...

பருகுவதும் நிறுத்தப்படுகின்றன. மீண்டும் முன்னிரவு ஆறரை மணிக்கு மேல்தான் உண்ணவும் பருகவும் முடியும். இவ்வாறு தொடர்ந்து முப்பது நாள்கள் நிகழும். இம் மாதம் முழுவதும் பகல் பொழுதுகளில் ஒரு சொட்டு நீரும் பருகாமல் நோன்பு நோற்கவேண்டும். வழக்கமாக மேற்கொள்ளும் ஐவேளைத் தொழுகையுடன் தராவீஹ் எனும் சிறப்புத் தொழுகை ஒவ்வொரு நாள் இரவும் ஒரு மணி நேரம் கூட்டுத் தொழுகையாக நிறைவேற்றப்படுகின்றது. இந் நோன்பு நாள்களில் நோன்பாளிகளிகள் முழுக்க முழுக்க இறைச் சிந்தனையாளர்களாக மாறிவிடுகின்றார்கள்.

## அறிவியல் நோக்கில்..:

இஸ்லாமிய மார்க்க அடிப்படையில் இந்த நோன்பு கடமையாக்கப்பட்டாலும், உளவியல் அடிப்படையிலும் மருத்துவியல் அடிப்படையிலும் மிகுபயன் விளைவிப்பனவாக அமைந்துள்ளன என்பதை அறிவியல் நோக்கோடு அணுகும்போது தெளிவாகப் புலனாகின்றது.

நோன்பு நோற்பவர் பகல் முழுவதும் எதையுமே உண்ணாமலும், பருகாமலும், புகைக்காமலும் அளவுக்கதிகமான மனக்கட்டுப்பாட்டுடன் தன் வழக்கமான வாழ்க்கைப் போக்கினின்றும் மாறுபட்டு வாழ்கிறார். தன் அன்றாட அலுவல்களிலும் தொய்வின்றி ஈடுபடுகின்றார். இதனால் மனஉறுதி மிக்கவராய்த் தன்னை ஆக்கிக்கொள்கிறார். "எல்லா வகையிலும் மனத்தைக் கட்டுப்படுத்துவதுதான் தூய்மையான போராட்டம் (ஜிஹாதுல் அக்பர்)" என்றார் நபிகள் நாயகம்.

மனத்தைக் கட்டுப்படுத்து தன் மூலமே பசியைக் கட்டுப்படுத்த முடியும். பசியைக்கட்டுப்படுத்தும் ஒருவனுக்குப் பிற இச்சைகளையும் விருப்பு வெறுப்புக்களையும் கட்டுப்படுத்துவது கடினமான காரியமல்ல

நோன்பு நோற்கும் காலத்தில் தீய செயல்களைச் செய்யாதிருத்தலோ அல்லது அவற்றைவிட்டு நீங்கியிருத்தலோ மட்டும் முக்கியமன்று. தீய உணர்வுகளே நெஞ்சத்தில் முளைவிடாது தடுக்கும் வகையில் மனத் திண்மை பெறவழி வகுப்பதே நோன்பு நோற்பதன் முக்கிய நோக்கமாகும்.

## தன்னைத் தானே அடக்கியாள......

பகலெல்லாம் அருஞ்சுவை உணவும் சுவைமிகு பானமும் பருகி இன்பமாக வாழும் முஸ்லிம், ரமழான் நோன்பு நாள்களில் இவைகளை அறவே ஒதுக்கி பசியுணர்வும் தாக வேட்கையுமிக்க கடினமான தவ வாழ்வை விரும்பி மேற்கொள்கிறான். இதன் மூலம் தன் உல்லாச வாழ்வுக்கு மாறாகச் சிக்கன உணர்வாளனாக மாறுகிறான். மனிதன் உண்பதற்கென இறைவன் அனுமதித்துள்ள உணவு வகைகளையே நோன்பின்போது மனிதனால் விலக்கிவைக்க முடிகிறதென்றால், அவனால் எத்தகைய தீங்கையும் விலக்கி வைக்கவும், வெறுத்தொதுக்கவும், மன வலுப்பெற இயலவே செய்யும். எனவே மனிதன், தன்னைத்தானே அடக்கியாள நோன்பு வழியமைத்துத் தருகிறதெனலாம்.

## ஈகைத் திருநாள்

ஒரு மாதகால நோன்பின்போது பசித் துன்பம் எத்தகையது; தாகத் துடிப்பு எப்படிப்பட்டது என்பதையெல்லாம் அனுபவித்து உணரும்போது, பசியாலும், தாகத்தாலும் வருந்தும் ஏழை, எளியவர்கள் மீது அன்பும், பசியும் ஏற்படுவது இயல்பேயாகும். எனவே, இத்தகைய பாதிப்புக்குள்ளாகும் மக்கள் பசித் துன்பத்தினின்றும் மீள, வாரி வழங்கும் ஈகையுணர்வு பூரித்தெழுகிறது. அவர்களின் துன்பத்தில் பங்கு கொள்ள விழைகிறது. எனவே தான், முஸ்லிம்கள் ரமழான் நோன்பு நாள்களில் ஏழை, எளியவர்களுக்கு வாரி வழங்கி மகிழ்கிறார்கள் நோன்புப் பெருநாளையே 'ஈகைத் திருநாளாக்' கொண்டாடி மகிழ்கிறார்கள்.

## மருத்துவ நோன்பு

மருத்துவவியல் அடிப்படையிலும் நோன்பு மிகச்சிறப்பான இயற்கை மருத்துவ முறையாக அமைந்துள்ளது. உடலில் கொழுப்பு மிகுந்திருந்தால், நீரிழிவு நோய், இதயநோய்கள், இரத்த அழுத்தம், மூத்திரக்காய் வீங்கியிருத்தல், நாள்பட்ட கீழ்வாத நோய் போன்றவைகளை இஸ்லாமிய நோன்பு முறையால் குணமாக்க இயலும் என அண்மைக்கால மருத்துவ ஆய்வுகள் காண்பித்துள்ளன.

நாள்தோறும் கொழுப்புச் சத்து மிக்க புலால் உணவுகளையும் சுவையான இதர உணவு வகைகளையும் மிகுதியாக உண்பதால் உடலில் கொழுப்புச்சத்து சேர உடல் பருமனாகிறது. இவ்வாறு தடித்த உடலைக் கொண்டோர் எளிதாக இதயநோய், நீரிழிவு நோய் போன்றவற்றுக்கு இலக்காகின்றனர். இதனால மாரடைப்பு போன்ற கொடிய நோய்கள் எளிதாகத் தலைதூக்க ஏதுவாகின்றன. எனவே தேவைக்கதிகமாக உடலில் சேர்ந்துள்ள கொழுப்புப் பொருளைக் கரைக்கவும், உடல் பருமனைக் குலறக்கவும் இதன் மூலம் பற்பல நோய்த் தொல்லைகளிலிருந்து விடுபடவும் 'நோன்பு' முறை எளிய இயற்கையான வழிமுறையாக அமைந்துள்ளது.

ரமழான் மாதம் முழுமையும் நோன்பு இருப்பதால் உடல் எடை வெகுவாகக் குறைய நேர்கின்றது. இதனால் இரத்தக் கொதிப்பு போன்ற நோய்கள் சீரடைகின்றன அல்லது குறைந்துவிடுகின்றன.

ஏனெனில், நோன்பு நாள்ளில் உண்ணும் உணவின் அளவு வெகுவாகக் குறைவதால் 'ஹார்மோன் சுரப்பதும் குறையவே செய்கிறது இதனால் இரத்தக் கொதிப்பும் மட்டுப்பட நேர்கின்றது.

மேலும் தொடர்ந்து முப்பது நாள்கள் நோன்பு நோற்பதால் உடலில் ஜீரண உறுப்புகளெல்லாம் நன்கு ஓய்வு பெற வாய்ப்பேற்படுகின்றது. நோன்பு முடிந்த பின்னர் இவ்வுறுப்புகளெல்லாம் புத்துணர்வோடு இயங்க இயலுகின்றது.

ஐந்து வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்கும் ரமழான் மாத நோன்பு கட்டாயமானாலும் நோயாளிகள், பிரயாணிகள், கர்ப்பிணிகள், பால் குடிக்கும் குழந்தையுடைய தாய்மார்கள் உடல் நலிவடைந்த வயோதிபர் ஆகியோருக்கு இஸ்லாம் விலக்கு அளித்துள்ளது.

சமய அடிப்படையிலும் உளவியல் மருத்துவ அடிப்படையிலும் மிகுபயன் விளைவிக்கவல்ல ரமழான் மாத நோன்பு ஒவ்வொருவருக்கும் ஆன்மீக பலத்தையும் உடல் வலுவையும் பெருக்கும் அருமருந்து.

# வீதிதிருத்துதற்கு சுண்ணம்புக் கல் பாவிப்பதால் அபாயம்

யாழ் மாவட்ட வீதி திருத்த வேலைகளுக்கு இப்பகுதிகளில் இருந்து பெறப்படும் சுண்ணாம்புக்கற்கள்பாவிக்கப்படுவதனால் குடாநாட்டிற்கு மண்ணரிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

1983ம் ஆண்டிற்கு முன்னர் ஓமந்தை, ஒட்டிசுட்டான் பகுதிகளில் இருந்துகிரனைட்வகைக் கற்கள் இங்கு கொண்டுவரப்பட்டு வீதித்திருத்த வேலைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வந்தது.

தற்போதுகிளிநொச்சிப் பகுதி வரைமட்டுமே கிரனைட் வகைக் கற்கள்பாவனையில்உள்ளன:

குடாநாட்டில் சுண்ணாம்புக் கற்கள் அகழ்வு வேலைகள் மேலும் அதிகரித்தால் குடாநாடு நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படுமெனவும் அஞ்சப்படுகின்றது, குடாநாட்டின் கடற்கரையோரங்களில் மண்ணரிப்பு வேகம் அதிகரிப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் சுண்ணாம்புக்கல் பாவனையால் வீதிகள் இலகுவில் சேதமடையும் என்றும்தெரிவிக்கப்படுகிறது. (03)

# கஸினோ போன்றவற்றால் இலங்கைப் பணம் சூறை

உல்லாசப் பிரயாண ஹோட்டல்களில் 'கஸினோ' விளையாட்டுக்களில் பெரும் தொகையான வெளிநாட்டுப் பணம் பயன்டுத்தப் படுகின்றது.

இலட்சக கணக்கில் இலங்கைப் பணத்தை வெளிநாட்டவர் தம்முடன் எடுத்துச் செல்கின்றனர்.

கஸினோ, ரேஸ்லொத்தர், ஜெக்பொட் போன்ற பல சூது விளையாட்டுக்கள் எவ்வித கட்டுப்பாடுமின்றி நடைபெறுவதால் நாட்டிற்கு இதனால் எவ்வித வருமானமும் கிடைப்பதில்லை.

எனவே இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி குழுவொன்றை நியமித்துள்ளார்.

இந்த அறிக்கை கிடைத்த பின்னர் 'கஸினோ' தொடர்பான சட்டங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

## யாழ். மன்னார் பஸ்ஆசனப் பதிவு

யாழ் பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் மன்னாருக்கான பஸ்ஸில் ஆசனப் பதிவுகள் ஏற்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஃப் பஸ் வண்டிக்கான ஆசனப் பதிவுகள் தினமும் எட்டு மணியில் இருந்து ஏற்கப்படும்என தெரிவிக்கப்பட்டுள்ளது (03)

## வைரவா அலங்கா உற்சவம்

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் தற்போது நடைபெறு வருகின்றது.

5ம் திகதி அன்னதானமும் இடம்பெறும். 11ம் திகதி வைரவர் சாந்தி நடைபெறும்


அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது நோன்புப் பெருநாள்
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

★

ஆண்களுக்கான சேட்டிங், சூட்டிங் துணிவகைகளும், பெண்களுக்கான றெடிமேட் ஆடைகளும், மற்றும் சிறந்த தையல் வேலைகளுக்கும்

**அமீர் ரெக்ஸ் & ரெயிலறிங்**

73, பெரியகடை, யாழ்ப்பாணம்

04242



**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள தமிழ்த்தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு

விபரங்களுக்கு:

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

04251



அனைவருக்கும் எமது ரமழான் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்

★ அழகிய
★ கவரிங்
★ வேலைகளுக்கு

**மஹீஸாஸ்**
**கோல்ட் கவரிங்**
(வின்ஸர் தியேட்டர் முன்பாக)

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

04243



அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புனித ரமழான் வாழ்த்துக்கள்

தரம்மிக்க
தங்கநகைகளுக்கு

**நபீஸா ஜுவல்லர்ஸ்**

171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

02494

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அபிவிருத்தியில் மானிய குழுவிற்கு அக்கறையில்லை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையும் பேரவையும் காலத்திற்குக்காலம் பல்வேறு ஆலோசனைகளையும் திட்டங்களையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்குச்சமர்ப்பித்து வந்தபோதும் இவற்றிற் பல வற்றிற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

வெளிவாரிப்பட்டப் பரீட்சை தொழிலாளர் க்ல்வி உயிரியல் தொழில்நுட்ப நிலையம் அமைத்தல் பட்டப்படிப்பு பீடம் நிறுவுதல் நுண்ணுயிர் இயல் ஒட்டுண்ணி இயல் துறைகள் நிறுவுதல் கணணி விஞ்ஞானத்துறை அமைத்தல் புறநிலைக் கல்வித் துறை ஆரம்பித்தல் பல் மருத்துவக் கல்லூரி நிறுவுதல் அரபு இஸ்லாமிய நாகரிகத் துறையும் மொழியியல்துறையும் நிறுவுதல்

மொழிப்பண்பாட்டுக்கல்வித் துறையில் உள்ள பிரிவுகளைத் தனிப்படுத்தி புதிய துறைகளை தொடங்குதல் கணித முதுமாணிப் பயில்நெறி ஆகிய முன் மொழிவுகள்பட்டியல்க்ள் முடங்கிக்கிடக்கின்றன என் அவ் வட்டாரங்கள் மேலும் தெவிக்கின்றன

இவை தவிர யாழ்.பல்கலைக் கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே விவசாய பீடம் அமைப்பது எந்திரவியற் பீடம் அமைப்பதும் அத்தியாவசியமான தேவைகளாகும்

ஆண்டுகள் பல சென்றுவிட்டபோதும் இன்னும் இவைமுழுமையாக இயங்கத் தொடங்கவில்லை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்யும் முயற்சிக்குப் பல்கலைக்கழக மானியக்குழு போதியளவு அனுசரணைகொடுக்கவில்லைஎன்பதும் மத்திய அரசின் அதிகார மையங்கள் அலச்சியமாக நடந்து கொள்கின்றன என்பதுமே பல்கலைக்கழக வட்டாரங்களின் அபிப்பிராயங்களாகவுள்ளன 03

## வீடமைப்பு நன்கொடை பணம் பெறுவோர்க்கு மரங்கள்

புனர்வாழ்வு அமைச்சுக்கு வெளிநாட்டில் இருந்து கிடைத்த மரங்கள் வீடமைப்பு நன்கொடைத்திட்டத்திற்கு பயன்டுத்தப்படவுள்ளது.

இந்த மரங்கள் யாழ். மாவட்டத்தில் வீடமைப்புக்கான 15 ஆயிரம் ரூபா நன்கொடை பெறுபவர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வீடு கட்ட மரம் தேவைப்படுவோர் தத்தமது உதவி அரசாங்க அதிபரிடம் தொடர்பு கொண்டு சிபார்சுக் கடிதம் பெற்று குருநகர் மரக்கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொள்ளுமபடி கேட்கப்பட்டுள்ளனர். இதே திட்டம்விரைவில் வடமராட்சி மரக்கூட்டுத்தாபனத்தில நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

தற்போது குருநகர் மரக்கூட்டுத்தாபனத் திற்கு மட்டுமே மரங்கள் வந்துசேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (03)

## முல்லைத்தீவு கொழும்பு இ.போ.ச.பஸ் சேவை

முல்லைத்தீவுக்கும் = கொழும்புக்கும் இடையிலான பஸ் சேவைஒன்றினை வடபிரதேசப் போக்கு வரத்துச்சபைஒழுங்கு செய்துள்ளது.

மேற்படி முல்லைத் தீவிலிருந்து கொழும்புக்குச் செல்லும் பஸ் கொழும்பில் இரத்மலானையில் இருந்து அல்லது கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இருந்து காலை முல்லைத்தீவை நோக்கிப் புறப்படும். மேற்படி பஸ்ஸில் பயணம் செய்யும் பிரயாணிகள் ஆசனப்பதிவை மேற் கொள்ளின் கட்டணத்துக்கு மேலாக முன்னரேயே ரூ 5 செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேசியவீரர் தினமான மே 22 ல் வடக்கு அரச அலுவலகங்களில் தேசிய கொடி ஏற்ற உத்தரவு

தேசிய வீரர்கள் தினமான மே 22 ம் திகதி வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள சகல அரசாங்கக் கட்டடங்களிலும் தேசியக் கொடியை முழுக்கம்பத்தில் பறக்க விடும் படி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலைச் சுற்றுநிருபம் மூலம் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.பி.ஏ.ரி. குணசிங்க சகல அரசத்திணைக்களங்களுக்கும் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (03)

## தீவுப்பகுதியில் கடும் வரட்சி மக்கள் நோய்களால பீடிப்பு

தீவுப்பகுதியில் நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக அப்பகுதிகளிலுள்ள சிறுவர் முதல் பெரியோர் வரை சொறி, சிரங்கு, கூவைக்கட்டு போன்ற தொற்று நோய்களினால் துன்பமடைந்து வருகின்றார்கள்

மேலும் கடந்த சில வாரங்களுக்கு முன் பெய்த சிறு மழையினால் அப்பகுதிகளிலுள்ள சிறுவர்களுக்கு ஒருவிதக்காய்ச்சலும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. (20

மேலதிக நிவாரணச் செய்திகள் 4ம் பக்கத்தில்

## இலங்கை வங்கி மக்கள் வங்கி நிவாரணக் கொடுப்பனவுகள்

இலங்கை வங்கி யாழ் கிளையில நாலாயிரம் ரூபா நிவாரணக்கொடுப்பனவுநாளை சனிக்கிழமை சுதுமலை, நவாலி, மானிப்பாய்ப் பிரிவினருக்கு மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப்படும்.

மக்கள்வங்கிகன்ணுதிட்டிகிளையில் நாலாயிரம்ரூபா ஆயிரம்ரூபா கொடுப்பனவுகள் மாசி மாதம் 9,10,11,17,18,25ஆம் திகதிகளிலும் பங்குனி 10, 24, 25 திகதிகளிலும் சித்திரை 7, 8 திகதிகளிலும் வழங்கப்பட்டபோது அவற்றைப் பெறத்தவறியவர்கள் 29 ஞாயிற்றுக்கிழமை மேற்படி வங்கிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

அராலி மேற்கு வடக்கு தென்மேற்கு தென்கிழக்கு சுழிபுரம் மேற்கு பொன்னாலை சுழிபுரம் கிழக்கு மூளாய் சங்கானை மேற்கு தெற்கு கிழக்கு தொல்புரம் சங்கரத்தை வட்டு மேற்கு தெற்கு கிழக்கு ஆகிய பிரிவினருக்கு இச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது

மேற்குறிட்ட திகதிகளில் பெறத்தவறியவர்கள் மேலும் தாமதியாது குறித்த தினத்தில் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு கன்ணுதிட்டி மக்கள் வங்கி முகாமையாளர் திரு எம் தியாகராசா கேட்டுக் கொள்கிறார்.

மேலதிக நிவாரணச் செய்திகள் 4ம் பக்கத்தில்

வாரமுரசொலி

மீண்டும் புதுப்பொலிவோடு

ஞாயிறு தோறும் வெளிவருகிறது

விலை ரூபா 4 மட்டுமே

### அரசாங்கம்...

அழைப்பினை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக ஈ பி ஆர் எல் எப் யாழ், மாவட்ட எம். பி, பிரேமச்சந்திரன் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்

## முருங்கன் பகுதி அடகு நகை மீளளிப்பு

முருங்கன் பகுதி மக்களுக்கான அடகு நகை மீளளிபபு தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்த மீளளிப்பு நகைகள் மன்னார் மக்கள் வங்கியிலேயே வழங்கப்பட்டு வருகின்றது. (03)

## மட்டு விமான நிலைய வீதி திறக்கப்பட்டது

மட்டக்களப்பு விமான நிலைய வீதி மீண்டும் மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

விமானப் படைத்தளபதியுடன் விடுதலைப்புலிகள் நடத்திய பேச்சைத் தொடர்ந்தே விமான நிலைய வீதி பொது சனப்பாவனைக்குத் திறந்து விடப்பட்டது.

### நிபுணர்களின்...

ளிப்பையும் மன்றம் (றாட்) எதிர்பார்க்கிறது.

சம்பந்தப்பட்டவர்களை 207 இராமலிங்கம் வீதி திருநெல்வேலியில் உள்ள தலைமை அலுவலகத்துடன் (Root) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

### யாழ்...

இந்த ஆசிரிய நியமனம் கிடைத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (3)

### மேற்பார்வை...

மணிக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ்மாவட்டக் கோண்டாவில் செயலகத்தில் நடைபெறும்.

விண்ணப்பத்தாரிகளுக்கு அறிவித்தல் அனுப்பபபட்டுள்ள போதிலும் அது கிடைக்கப் பெறாதவர்கள் அன்றைய தினம் பிறப்புசான்றிதழ் கல்வி சான்றிதழ், கிராமசேவகர் வதிவிடச்சான்றிதழ், அனுபவ சான்றிதழ் ஆகியவற்றுடன் வரும்படி கேட்கப்பட்டுள்ளன பெண் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு சமுகம் அளிக்கத் தேவையில்லை எதுவும் அறிவிக்கப்பட்டுளது.

பாராளு மன்றத்தில் ஈரோஸ் எம் பி உரை

## 6வதுதிருத்த சட்டம்பிரிவினையை தடுப்பதாக அமையவேயில்லை

அரசு ஆறுவது திருத்தச் சட்டத்தை நீக்குவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை புரிந்து கொண்டு காரியமாற்றம் தொடங்கி இருக்கிறது என்பதைநிரூபிக்க முடியும்இங்வாறுபாராளுமன்றத்தில் அவசரகாலசட்ட நீடிப்பு விவாதத்திற் கலந்து கொண்டு பேசிய ஈரோஸ் எம் பி ஷேக் தாவூத் தெரிவித்தார்.

இங்குள்ள எவரும் அமைதிக்கு எதிரானவர்கள் அல்லர் எனவே இத்தகைய நடவடிக்கை மூலம் அனைவரும் பரஸ்பர நம்பிக்கை கொள்ள கூடியதாக இருக்கும் ஆறுவது திருத்தச் சட்டம் பிரிவினையை தடுப்பதாக அமயவில்லை அது ஓர் இனத்தின் தலைவிதியைநிர்ணயிப்பதாகஉள்ளது.

சட்டத்தை நீககுவது தொடர்பாக அரசியல் வேறுபாடுகளை முன்னிறுத்திக்காட்டுவது எந்தச் சிங்களப் பெரும்பான்மைக் கட்சியும் இனப்பிரச்சனையை தீர்க்க விரும்பவில்லை என்பதைக் காட்டுவதாகஅமையும் என தாவூத் தனது உரையில் குறிப்பிட்டார்.

## அமைச்சர் தேவராஜின் யாழ் விஜயம் ஒத்திவைப்பு

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு பி. பி. தேவராஜின் வடபகுதி விஜயம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது பற்றி ஏற்னவே முரசொலி செய்திவெளியிட்டிருந்தது தெரிந்ததே இவரது விஜயம் ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்பட வில்லை. (3)

## விடுதலைப்புலிகள் அரசைநம்பினர் அதனாலேயே பேச்சுநடந்தது

ஈ பி ஆர் எல் எவ் இன்னும் இந்தியாவைத் தான்நம்பிக் கொண்டு இருக்கின்றதுஎனினும் அவர்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்றே அரசாங்கம் அவர்களுக்குப்பேச்சு நடத்தச் சந்தர்ப்பம் கொடுத்துள்ளது

இவ்வாறு பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்

ஏன் அரசு விடுதலைப்புலிகளுடன்மட்டுமேபேசுகின்றது; என நிருபர் ஒருவர் கேட்டதற்கு பதில் அளிக்கையிலே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்

விடுதலைப்புலிகள் இந்த அரசை நம்புகின்றனர் ஆனால் ஏனைய இயக்கங்கள் எம்மை நம்புகின்றனரில்லை விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்திவருகின்றது. அவர்களை ஜனநாயக வழிக்குக் கொண்டுவர ஜனாதிபதி முயற்சித்து வருகின்றார் எனவும் அமைச்சர் ரஞ்சன் மேலும் தெரிவித்தார்,

## கடற்படை கப்பல்கள்

இரு அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்தன.

மறுதினமே அவை புறப்பட்டுச் செல்லும் எனத் தொரிவிக்கப்பட்டது.

## வடக்குக்கிழக்கு இருமாணவர் மே. 4ல் ஆஸி. பயணம்

கடந்த க. பொ. த. உயர் பரீட்சையில் திறமையாக சித்தியெய்திய ஒவ்வொரு மாகாணங்களையும் சேர்ந்த பத்து மாணவர்கள் வரும் 4 ம் திகதி அவுஸ்ரேலியா பயணமாகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் திருமலை கிருஷ்ண மிஷன் கல்லூரி மாணவன் ரவீந்திரனும், வடக்கு மாகாணத்தில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் ஆனந்தக்குமாரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ், [பிரைவேட்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஆ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 27-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது